**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE , MUDUKULATHUR**
STC.No.42/2026
Prosecution witness.03

| | |
|---|---|
| பெயர் : ராஜவேல் | தொழில் : |
| தந்தை/கணவர் பெயர் : கருப்பச்சாமி | கிராமம் : |
| வயது : | தாலுகா : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths act, 1969 (Central Act 44 of 1969)

26.03.2026

(1 முதல் 3 எதிரிகள் ஆஜர்).

(சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை :**

நான் தேரிருவேலியில் குடியிருந்து தற்போது வேலைக்காக முயன்று கொண்டிருக்கிறேன். அசா.1 மற்றும் ஆஜர் எதிரிகளை கல்லூரியில் ஒன்றாக படித்தவர்கள் என்ற முறையில் தெரியும் மற்றபடி இவ்வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டியதன் பெயரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்).

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 11.11.2021ம் தேதி மதியம் 02.00 மணியளவில் இவ்வழக்கின் எதிரிகள் அசா.1 மதிவின் என்பவரிடமும், என்னிடமும் வருடம் முடிவில் விழா நடத்துவதற்கு பணம் கேட்டார்கள் என்றால் சரியல்ல. எதிரிகள் மூவரும் அசா.1யை பார்த்து மது அருந்துவற்கு காசு கேட்டதாக சொன்னியம்மாம்லடா என்று சொல்லி ஆபாசமான

வார்த்தைகளால் அசா.1 யை திட்டினார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அசா.1 ன் கன்னத்தில் எதிரிகள் மாறி மாறி அடித்து கீழே தள்ளி மிதித்தார்கள் என்றாலும், அதனால் அசா.1 க்கு கன்னத்தில் கீரல் காயமும், நெஞ்சு வலியும், கண்களும் சிவந்து விட்டன என்றாலும் அதுபற்றி எனக்கு தெரியாது. இது குறித்து போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளுடன் சமாதானமாக சென்றுவிட்டதால் எதிரிகளுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE , MUDUKULATHUR**
**STC.No.42/2026**
Prosecution witness.04

| | |
|---|---|
| பெயர் : முருகேசன் | தொழில் : |
| தந்தை/கணவர் பெயர் : வேலு | கிராமம் : |
| வயது : | தாலுகா : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths act, 1969 (Central Act 44 of 1969)

26.03.2026

( 1 முதல் 3 எதிரிகள் ஆஜர்).
சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

நான் தற்போது முதுகுளத்தூரில் குடியிருந்து கூலி வேலை செய்கிறேன். எனக்கு இவ்வழக்கின் நிகர்நிலை புகார்தாரரையோ, ஆஜர் எதிரிகளையோ தெரியாது. வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. நான் போலிசாரிடம் எதுவும் கையொப்பம் செய்து தரவில்லை. என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள சாட்சி கையொப்பங்களில் ஒன்று கூட என்னுடையது அல்ல. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.
(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டியதன் பெயரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்).

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 11.11.2021ம் தேதி 17.00 மணியளவில் நானும், கோவிந்தன் என்பவரும் இவ்வழக்கின் சம்பவ இடத்தில் நின்று கொண்டிருந்தபோது முதுகுளத்தூர் காவல்நிலைய போலிசார் சம்பவம் நடந்த இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம்

வரைந்து பார்வை மகஜர் தயார் செய்தபோது சாட்சியாக இருந்து பார்வை மகசரில் கையொப்பம் செய்துவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இல்லை.

**DEPOSITION OF WITNESS**

**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR</u>**

STC.No.42/2026
Prosecution witness.05

பெயர் : முகில்அரசன் | தொழில் :

தந்தை/கணவர் பெயர் : | கிராமம் :

வயது : | தாலுகா :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths act, 1969 (Central Act 44 of 1969)

<u>26.03.2026</u>

(1 முதல் 3 எதிரிகள் ஆஜர்).

**<u>முதல் விசாரணை :</u>**

**1)** நான் தற்போது முதுகுளத்தூர் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இவ்வழக்கின் முதல்தகவல்அறிக்கை பதிவு செய்து புலன்விசாரணை செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்த சார்பு ஆய்வாளர் திரு.இளஞ்செழியன் அவர்கள் பணிமாறுதலாகி சென்றுவிட்டபடியாலும், அவர் என்னுடன் காவல்நிலையத்தில் பணிபுரிந்த காரணத்தினால் அவரது கையொப்பம் நன்கு தெரியும் என்பதன் அடிப்படையிலும், ஆவணங்கள் அடிப்படையிலும் நான் அவருக்காக சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 11.11.2024 ம் தேதி 16.00 மணியளவில் சார்பு ஆய்வாளர் திரு.இளஞ்செழியன் முதுகுளத்தூர் காவல் நிலையப் பொறுப்பில் இருந்தபோது தேரிருவேலி மேற்கு தெருவை சேர்ந்த மதிவின், த.பெ.சக்திவேல் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று புகார் மனுவின் தன்மைக்கு ஏற்ப நிலையக் குற்ற எண்.390/2021 பிரிவுகள் 294(b), 323 IPC கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **புகார் மனு அ.சா.ஆ.2 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

**2)** அவர் வழக்கினை புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே 17.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் கோவிந்தன் மற்றும் முருகேசன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்து பார்வை

மகஜர் தயார் செய்துள்ளார். **பார்வை மகஜர் அ.சா.ஆ.4 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**3)** அன்றைய தினமே பட்டியல் சாட்சிகளான மதிவின், ராஜகோபால், சந்தோஷ், கோவிந்தன் மற்றும் முருகேசன் ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். வழக்கு சம்பவம் உண்மை என தெரிய வந்ததாலும் எதிரிகள் குற்ற சம்பவத்தில் ஈடுபட்டது உண்மை என தெரியவந்ததாலும் 2ம் எதிரியை 13.11.2021ம் தேதி 13.00 மணிக்கு காக்கூர் TELC சர்ச் அருகே வைத்து கைது செய்து நிலைய பிணையில் விடுவித்துள்ளார். 1 மற்றும் 3ம் எதிரிகள் தொடர்ந்து தலைமறைவாக இருந்ததால் அவர்களை கைது செய்யவில்லை. வழக்கில் தடயப் பொருட்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை.

**4)** அத்துடன் வழக்கின் புலன் விசாரணையை முடித்து 28.02.2022ம் தேதி எதிரிகள் மீது பிரிவுகள் 294(b), 323 IPC கீழ் இறுதி அறிக்கையை கனம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

வாதி கொடுத்த பொய் புகாரை முறையாக விசாரணை செய்யாமல் முதல் தகவல் அறிக்கை, பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல.